# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Civil Procedure)

**In the Court of** : District Munsif – cum – Judicial Magistrate Court, Pennagaram.

**Case No.** : **CC No.36/2022**

**Prosecution witness** : **PW - 1**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the Cr.P.C on this 2

2nd **day of July 2026**

| | | | |
|---|---|---|---|
| **Name** : Subramani | | **Cast** : | |
| **Father's Name** : Kuppusamy | | **Calling** : | |
| **Village** : | | **Religion** : | |
| **Taluk** : | | **Age** : | |

(Accused are present)

**சத்திய பிரமாண வாக்குமூலம்**

நீதிமன்றம் : மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம்.

வழக்கு எண். : ஆ.ப.எண்.36/2022

வழக்கு சாட்சி : 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சுப்பிரமணி | ஜாதி : | |
| தந்தை பெயர் : | குப்புசாமி | தொழில் : | |
| கிராமம் : | | சமயம் : | |
| தாலுக்கா : | | வயது : | |

**முதல் விசாரணை**

நான் பள்ளிமுத்தானூர் கிராமத்தில் வசித்து பஞ்சாயத்து டேங்க் ஆப்ரேட்டர் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் கதிரவேல், கோவிந்தம்மாள், கண்ணன் ஆகியோர் என் வீட்டிற்கு 100 மீ தொலைவில் குடியிருந்து வருகிறார்கள். எனக்கும் கதிரவேலுக்கும் இடையே பைப்லைன் உடைத்தது சம்பந்தமாக 2 மாதத்திற்கு முன்பாக தகராறு இருந்து வந்தது. சுமார் 5 வருடத்திற்கு முன்பாக இரவு 08.30-08.45 மணியளவில் பாலிக்காடு ரோடு அருகே உள்ள டிரான்ஸ்பார்மர் அருகே நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது கதிர்வேல் வந்தார். அப்போது கதிர்வேலை பார்த்து நான் வீட்டில் இல்லாத சமயத்தில் 2 முறை வீட்டிற்கு வந்து எதற்காக பார்த்தாய் என்று

கேட்டேன். அப்போது அவர் கெட்ட வார்த்தையால் திட்டி வலதுகையில் ஆள்காட்டி விரலை பிடித்து உடைத்துவிட்டார். நான் சத்தம் போட்டேன். அப்போது சக்திவேலும், சேகரும் வந்து என்னை தடுத்து வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். நான் வீட்டிற்கு செல்லும்போது அருகிலிருந்தவர்கள் காலையில் பேசிகொள்ளலாம் என்று கூறினார்கள். பின்னர் அரை மணி நேரம் கழித்து கதிரவேல், கோவிந்தம்மாள், கண்ணன் அவர்கள் வீட்டிலிருந்து ஓடிவந்தார்கள். என்னை பார்த்து தேவடியா பையா, கண்டாரஓலிபையா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். கதிர்வேல் கத்தியை எடுத்துகொண்டு வந்து என்னை வெட்ட வந்தார். அப்போது என் மகன் சுதாகர் தடுக்க முயன்றும் இடது பக்க முதுகில் கத்தி கிழித்து கொண்டு சென்றது. பின்னர் மறுபடியும் என் மகன் சுதாகரை அவருடைய இடது முன் தலையில் கதிர்வேல் கத்தியால் வெட்டினார். சுதாகர் மயக்கம் அடைந்து விட்டார். கண்ணன் கல்லை எடுத்து வந்து என் வயிற்றில் குத்திவிட்டு, என் மகன் சுதாகர் வயிற்றில் குத்திவிட்டு சுதாகரின் விரலை உடைத்து விட்டார். அந்த சமயத்தில் கோவிந்தம்மாள் டார்ச்லைட்டை பிடித்துகொண்டு இருந்தார். பின்னர் அஜித் என்பவர் வந்து தேவந்திரனுக்கு சொந்தமான காரை எடுத்துகொண்டு வந்து தருமபுரி அரசு மருத்துவனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக புகார் வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அசா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

பஞ்சாயத்தில் ஆப்ரேட்டராக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். இன்னும் எத்தனை வருடம் பணி இருக்கிறது என்றால் இன்னும் 3 வருடம் இருக்கிறது. மொத்தம் 22 வருடங்கள் ஆகும். கோவிந்தம்மாளின் கணவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன உறவு முறை என்றால் மச்சான் உறவு முறை ஆகும். குத்தகை சம்பந்தமாக எதிரிகள் நிலத்தை நான் ஓட்டியதால் 1ம் எதிரியின் தந்தை கருப்பன் என்பவர் உயிருடன் இருந்த காலத்தில் இருந்தே கடந்த 25 வருட காலங்களாக எதிரி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை. என் மகன் சுதாகரும், 1ம் எதிரிக்கும் தனியாக நட்பு இருந்தது என்றால் இல்லை. 1ம் எதிரி கதிர்வேல் எங்கள் வீட்டிற்கும், என் மகன் சுதாகர் கதிர்வேல் வீட்டிற்கும் வந்து செல்வார்கள் என்றாலும், நான் அதை கண்டுகொள்ளமாட்டேன் என்றாலும சரியல்ல. சம்பவத்திற்கு 3 மாதகாலத்திற்கு முன்பு 1ம் எதிரி கதிர்வேலிடம் ரூ.5000 கடன் பெற்றார் என்றால் சரியல்ல. கை மாற்றாக கொடுத்த கடன் தொகை கேட்டதால் 1ம் எதிரி என் மகனிடம் திரும்ப கேட்டபோது அதை நான் கொடுக்கக்கூடாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று மாலை 06.30 மணியளவில் நாகாவதி அணை ஆற்றின் ஓரம் வைத்து 1ம் எதிரி கதிர்வேல் என் மகனிடம் கைமாற்றாக வாங்கிய கடன் தொகையை கேட்டார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் அங்க சென்ற நான் 1ம் எதிரி கதிர்வேலை பார்த்து என் மகனிடம் உனக்கென்ன பேச்சு என்று அவனை அடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எந்த பைப்லைன் ஒடைந்துபோனது என்றால் எங்கள் வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் சென்ற பைப்லைன் ஒடைந்துவிட்டது. அதனால் எங்கள் வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் தண்ணீர் வரவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு தண்ணீர் வந்தது. எதிரி வீட்டிற்கு

ஆரம்பத்திலிருந்தே தண்ணீர் வரவில்லை.எதிரி வீட்டின் பைப்லைன் எவ்வாறு உடைந்தது என்றால் 1ம் எதிரி கதிர்வேல் 2 மாதங்களுக்கு முன்பு உடைத்துவிட்டார். இதுகுறித்து காவல் நிலையத்திலோ, பஞ்சாயத்திலோ தகவல் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. எதிரிகளின் வீட்டிற்கு பைப்லைன் போடக்கூடாது என்று நான் எதுவும் தடுத்தேனா என்றால் நான் தடுக்கவில்லை. 1ம் எதிரி என்னிடம் வந்து உன் வீட்டிற்கு செல்லும் பைப்லைனை உடைத்துவிடுவேன் என்று சொல்லி உடைத்துவிட்டார். அது எனக்கு நேரில் தெரிந்தும் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் பிறகு எதிரிகள் வீட்டிற்கு பைப்லைன் சரிசெய்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. பஞ்சாயத்து டேங்க் பைப்லைன் பாலிகாடு போகும் ரோட்டில் ஆற்றிற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். பஞ்சாயத்துடேங்க் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 250 மீ தொலைவு இருக்கும். எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 2 நாட்கள் இருந்தேன். 1ம் எதிரி கதிர்வேலும் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் காலையில் வந்து விட்டு 2 மணிநேரம் இருந்துவிட்டு சென்றுவிட்டார். என் மகன் சுதாகர் எத்தனை நாள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் 2 நாள் இருந்தார். கதிர்வேலை போலிசார் மருத்துவமனையில் விசாரித்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கும் எனது மகனுக்கும் ஒரே நேரத்தில் மயக்கம் ஏற்பட்டதா என்றால் முதலில் என் மகனுக்கு மயக்கம் வந்தது. அதன்பிறகு எனக்கு மயக்கம் ஏற்பட்டது. முதலில் என் மகனுக்கு காயம் ஏற்பட்டு மயக்கம் அடைந்தார் என்றால் சரிதான். அதன்பிறகு என்னை வெட்ட வந்தபோது பெண்கள் பிடித்ததால் எனக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. சம்பவத்தின்போது என்னை வெட்டவந்ததை யார் தடுத்தார்கள் என்றால் என் மனைவி சரோஜா , பக்கத்துவீட்டுகாரர் மாதம்மாள் தடுத்தார்கள். சம்பவத்தின்போது வேறு யாராவது இருந்தார்களா என்றால் சக்திவேல், சேகர் இருந்தார்கள். புகார் எப்போது கொடுத்தேன் என்றால் காலை 10 மணிக்கு கொடுத்தேன். புகார் கொடுக்கும்போது என் மகன் உடன் இருந்ததாக கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. அதன்பிறகு 2–வது சம்பவம் நடைபெற்றபோது என் மகன் உடன்இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் முதல் சம்பவம் நடைபெற்றபோதும், 2–வது சம்பவம் நடைபெற்றபோதும் என்மகன் உடன் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சேகர் மற்றும் சக்தி என்ன உறவுமுறை என்றால் மாமன் உறவு முறை. கோவிந்தம்மாள் டார்ச்சிலைட் அடித்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். டார்ச் லைட்டை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. கத்தியை காட்டி போலிசார் என்னிடம் விசாரித்தார்களா என்றால் இல்லை. கல், கத்தி, டார்ச்லைட் ஆகியவை வழக்கு சம்பவத்தில் இல்லை என்றாலும், எதிரிகளின் மீது உள்ள முன்விரோதம் காரணமாக பொய்யான வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தற்போது திருப்பூரில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக இருக்கிறார்கள் என்றால் 4 1/2, 5 வருடமாக இருக்கிறார்கள். சம்பவ இடத்தில் கிழக்கு மேற்கு என்ன இருக்கிறது என்றால் கிழக்கே ரோடு உள்ளது. மேற்கும் ரோடு உள்ளது. தெற்கே மாது நிலம் உள்ளது. வடக்கே பாவாயி விஜியா நிலம்

உள்ளது. சம்பவ சமயத்தில் என்ன பயிர் நிலங்களில் இடப்பட்டிருந்தது என்றாலும் எந்த பயிரும் பயிரிடப்படவில்லை. சம்பவட இடத்தை போலிசாரிடம் காண்பித்தேனா என்றால் 4 நாட்கள் கழித்து போலிசார் வந்தார்கள். சம்பவ இடத்தை பார்க்க எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 11 மணிக்கு வந்தார்கள். மோட்டார் ரூம் எந்த பக்கம் உள்ளது ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது. டேங்க என் வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 50 மீ தொலைவு இருக்கும். என் வீட்டிற்கும் எதிரி கண்ணன் வீட்டிற்கும் இடையில் தான் சம்பவம்இடம் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் எங்கு உள்ளது என்றால் ரோட்டிற்கு தாண்டி அவர்கள் வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் இடையில் உள்ளது. 08.30 மணிக்கு என்னை அடித்தபோது எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். 2வது சம்பவத்தின்போது 1 முதல் 3 எதிரிகள் என்னிடம் ஏன் என் பையனை அடித்தாய் என்று நியாயம் கேட்டதற்கு நாங்கள் தான் எதிரிகளை தாக்கி விட்டு ஓடிவிட்டு கீழேவிழுந்தபோது ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து தலைவர் எனக்கு தெரிந்தவர்என்பதால் என் மீது இருந்த வழக்கை மோசடியாக மாற்றிவிட்டு எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவரிடம் சிகிச்சைக்கு சென்றபோது அஜித்தான் மருத்துவரிடம் விவரத்தை சொன்னார் என்றால் சரியதான். சம்பவம் என் வீட்டின் அருகில் தான் நடந்துள்ளதாக அஜித் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் வெளியூருக்கு சென்றுவிட்டதால் அவர்களின் நிலங்களை விலைக்கு கேட்டதால் அவர்களுக்கும், எங்களுக்கும் முன்பகை ஏற்பட்டது என்றாலும், மேற்படி முன்பகை காரணமாக எதிரிகளின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புகாரிலோ, போலிசார் வாக்குமூலத்திலோ சாம்பவத்தை யார் பார்த்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.